## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## ஆறாம் பத்து

### மூன்றாம் திருமொழி - துறப்பேன்
### திருவிண்ணகர் 3

** துறப்பேன் அல்லேன் * இன்பம் துறவாது * நின் உருவம்
மறப்பேன் அல்லேன் * என்றும் மறவாது ** யான் உலகில்
பிறப்பேனாக எண்ணேன் * பிறவாமைப் பெற்றது * நின்
திறத்தேன் ஆதன்மையால் * திருவிண்ணகரானே! 1

துறந்தேன் ஆர்வச் செற்றச் * சுற்றம் துறந்தமையால் *
சிறந்தேன் நின் அடிக்கே * அடிமை திருமாலே! **
அறம் தானாய்த் திரிவாய்! * உன்னை என் மனத்தகத்தே *
திறம்பாமல் கொண்டேன் * திருவிண்ணகரானே! 2

மானேய் நோக்கு நல்லார் * மதி போல் முகத்து உலவும் *
ஊனேய் கண் வாளிக்கு * உடைந்து ஓட்டந்து உன் அடைந்தேன் **
கோனே! குறுங்குடியுள் குழகா! * திருநறையூர்த்
தேனே! * வருபுனல் சூழ் * திருவிண்ணகரானே! 3

சாந்தேந்து மென்முலையார் * தடந்தோள் புணர் இன்ப வெள்ளத்து
ஆழ்ந்தேன் * அருநரகத்து அழுந்தும் * பயன் படைத்தேன் **
போந்தேன் புண்ணியனே! * உன்னை எய்தி என் தீவினைகள்
தீர்ந்தேன் * நின் அடைந்தேன் * திருவிண்ணகரானே! 4

மற்றோர் தெய்வம் எண்ணேன் * உன்னை என் மனத்து வைத்துப்
பெற்றேன் * பெற்றதுவும் * பிறவாமை எம்பெருமான்! **
வற்றா நீள் கடல் சூழ் * இலங்கை இராவணனைச்
செற்றாய்! * கொற்றவனே! * திருவிண்ணகரானே! 5

மை ஒண்கருங்கடலும் * நிலனும் மணி வரையும் *
செய்ய சுடர் இரண்டும் * இவையாய நின்னை ** நெஞ்சில்
உய்யும் வகை உணர்ந்தேன் * உண்மையால் இனி * யாது மற்றோர்
தெய்வம் பிறிது அறியேன் * திருவிண்ணகரானே! 6

வேறே கூறுவது உண்டு * அடியேன் விரித்து உரைக்கும்
ஆறே * நீ பணியாது அடை * நின் திருமனத்து **
கூறேன் நெஞ்சு தன்னால் * குணம் கொண்டு * மற்றோர் தெய்வம்
தேறேன் உன்னை அல்லால் * திருவிண்ணகரானே! 7

முளிந்து ஈந்த வெங்கடத்து * மூரிப் பெரும் களிற்றால் *
விளிந்தீந்த மாமரம் போல் * வீழ்ந்தாரை நினையாதே **
அளிந்து ஓர்ந்த சிந்தை * நின் பால் அடியேற்க்கு * வான் உலகம்
தெளிந்தே என்று எய்துவது? * திருவிண்ணகரானே! 8

சொல்லாய் திருமார்வா! * உனக்காகித் தொண்டு பட்ட
நல்லேனை * வினைகள் நலியாமை * நம்பு நம்பீ **
மல்லா! குடமாடி! * மதுசூதனே! * உலகில்
செல்லா நல் இசையாய்! * திருவிண்ணகரானே! 9

** தாரார் மலர்க் கமலத் * தடம் சூழ்ந்த தண் புறவில் *
சீரார் நெடு மறுகில் * திருவிண்ணகரானை **
காரார் புயல் தடக்கைக் * கலியன் ஒலி மாலை *
ஆரார் இவை வல்லார் * அவர்க்கு அல்லல் நில்லாவே 10

**அடிவரவு:** துறப்பேன் துறந்தேன் மானேய் சாந்து மற்றோர் மை வேறே முளிந்தீந்த சொல்லாய் தாரார் கண்ணும்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---